Regd. No. M. 2811.

காலணா

சுதந்திரச்சங்கு


" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 11-5-33

காந்திஜியும், ஜான்புல்லும்



இவ்வளவு நாள் கழித்து ஜான்புல்லுக்கு ஞானோதய மேற்பட்டிருக்கிறது. எரவாடா சிறைக் கதவுகளைத் திறந்து, காந்தியடிகளை விட்டு விட்டான். கதவுகளைத் திறந்து வழி காட்டும் அந்தக் கைகள் சமாதானத்திற்காக நீட்டப்படுமோ, அல்லது இரும்புக் கைகளாகவே இன்னமும் ஆட்சி புரியுமா, பார்ப்போம்.

தலைவர் ஆக்ஞை

எரவாடாக் கதவுகள் திறந்து விட்டன. தேசிய வீரர்களுக்கு நமது தலைவர் உத்தர விட்டு விட்டார். ஆறு வார காலம் சட்ட மறுப்பை நிறுத்தி வைக்க வேண்டு மென்பது அவரது ஆக்ஞை! தலைவர் உத்தரவுக்குத் தலை வணங்க வேண்டியது வீரர்கள் கடமை! மீண்டும் நாட்டில் சமாதானத்தை உண்டாக்க நமது தலைவர் முனைவார். துரைத்தனத்துக்கு அறிவிக்க வேண்டியவைகளையும் மகாத்மா அறிவித்து விட்டார். பிரிட்டிஷாரின் மனக் கதவு திறக்கப்படுமோ?

“சர்க்காருக்கு ஒரு வேண்டுகோள். தேசத்தில் உண்மையான சாந்தம் நிலவ வேண்டுமாயின், அவசரச் சட்ட ஆட்சி ஓர் ஆட்சியல்ல வென்பதை சர்க்கார் அறியுமாயின், யாதொரு நிபந்தனையு மின்றி சட்ட மறுப்புக் கைதிகளை உடனே விடுவிக்க வேண்டும்........ நான் இங்கிலாந்தினின்று திரும்பியபோது ராஜீயக் கயிற்றை எங்கு விட்டேனோ அங்கிருந்து தொடங்குவேன்........ஸர்தார் வல்லபாய், அப்துல் காபூர் கான், ஜவஹர்லால் போன்றோர் உயிரோடு புதைக்கப்பட்டவர்கள் போல சிறையிலடைக்கப் பட்டிருக்கும் வரை சர்க்காரோடு ஒப்பந்த மேற்படுவதற்கு இடமில்லை. சட்டமறுப்பை முற்றிலும் ரத்துசெய்ய வேண்டுமாயின் அந்த அதிகாரம் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குத் தான் உண்டு” என்று காந்திஜி தமது அறிக்கையில் கூறியிருக்கின்றார். தேசத்தில் உண்மையான சமாதானம் நிலவ வேண்டு மென்பதில் அரசாங்கத்துக்கு சிரத்தை யுண்டா இல்லையா என்பதற்கு இப்போது சோதனைக் காலம் வந்திருக்கிறது.

இவ்வளவு நாள் விடாது விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்களுக்கு தலைவர் தமது ஆசியை வழங்கியதோடு இயக்கத்தை நடத்தியவர்கட்கு ஓர் புத்திமதியும் தந்திருக்கிறார்.

“சட்ட மறுப்பு இயக்கத்தில் எனக்குள்ள நம்பிக்கையில் சிறிதும் மாறுதலேற்பட வில்லை. கணக்கி லடங்காத சத்தியாக்கிரகிகள் வீர உணர்ச்சியோடும், தியாக புத்தியோடும் உழைத்ததற்கு நன்றி கூறுகின்றேன். ஆனால் இந்த இயக்கத்தில் ‘இரகஸ்ய’ நடவடிக்கைகளைக் கலந்தது தவறாகும். இனி இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த நேருமாயின் தேசத்தின் பல பாகங்களிலு முள்ள தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்; இரகஸ்ய நடவடிக்கை அடியோடு வேண்டாம்! அத்தகைய உண்மை வீரமுடைய ஒரு சத்தியாக்கிரகி கிடைப்பது அருமை யென்றாலும், பரவாயில்லை!” என்கின்றார் மகாத்மா.

இவரன்றோ சத்தியசந்தர்! இவரன்றோ உண்மை வீரர்! இத்தகைய தேசியத் தலைவரை இதுவரை உலகம் பார்த்திருக்கின்றதா? ஏமாற்றும், சூழ்ச்சியும், பொய்யும், புனைசுருட்டுமே ராஜ தந்திரமாக விளங்கும் இந்நவீன நாகரிக காலத்தில், உலகுக்கே அத்தி பூத்ததுபோல் ஓர் மகான் இவர் என்பதற்கு என்ன தடை? மகாத்மா மேலும் கூறுகின்றார்.

“எனது 21 நாள் தவம் முடிந்த பின்னரும் எனது தாய் நாட்டின் ராஜிய நிலை இருளடைந்திருக்குமாயின், நான் சட்டமறுப்பு இயக்கத்தில் பகிரங்கமாகவோ இரகஸ்யமாகவோ பங்கெடுத்துக் கொள்ளேன்! துரைத்தனம் என்னை மீண்டும் எரவாடா சிறைக்குக் கொண்டு செல்லுமாக! நானின்றி அநாதைகளாய் அங்கு கிடக்க நேரிடும் எனது தோழர்களிடம் என்னைத் துரைத்தனம் கொண்டு சேர்க்குமாக!” என்று கல்லையும் கரைக்கும் மொழிகளில் காந்திஜி கதறி யிருக்கின்றார். இந்த உருக்கமான கடிதத்துக்கு பிரிட்டிஷ் துரைத்தனம் இரங்குமா இரங்காதா வென்பதைப் பார்ப்போம்! சமாதான மென்னும் பாலத்திற்கு காந்திஜி அஸ்திவாரம் போட்டு விட்டார். இனி வில்லிங்டனும் ஹோரும் அதைத் தொடர்ந்து கட்டுவார்களா, அல்லது தூர்த்து விடுவார்களா பார்ப்போம். இனி இந்தியாவில் ஏற்படும் இராஜீய நிலைமைகட்கு அவர்கள் தான் பொறுப்பாளிக ளென்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

தேச மக்களாகிய நாம் தற்சமயத்தில் செய்ய வேண்டிய வேலை ஒன்று தான். நமது ஒப்பற்ற தலைவரின் விலை மிகுந்த உயிர் இன்று வேள்வித் தீயில் வெந்து கொண்டிருக்கிறது. இந்த 21 நாள் உண்ணாவிரத காலத்தையும் யாதொரு இடையூறு மின்றிக் கடந்து அய்யன் வெற்றியடைய வேண்டுமென்று ஆண்டவனிடம் அநுதினமும் நாம் வேண்டிக் கொள்ள வேண்டும். அவரது ஆன்மாவுக்கு இன்பந் தரத்தக்க ஹரிஜனப் பணியில் மும்முரமாக உழைக்கவேண்டும். வீரத் தொண்டர்களே! நமது தலைவர் ஆக்ஞையைச் சிரமேற் கொள்ளுங்கள். வெற்றி கிட்டுமென்பது நிச்சயம்!

வேள்வித் தீப்பொறி

(மகாதேவ தேசாய்)

இந்த மாதிரி மகாத்மா கடுமையாக விரதம் பூணுவாரென்று நாங்கள் அறியோம். 30ம் உ காலை நான்கு மணிக்கு பிரார்த்தனைக்கு நாங்கள் எழுந்தோம். அன்று காலை பிரார்த்தனைக்கு "உட் ஜக் முஜாபர் போர் பாயி" என்ற கீதத்தை நான் பொறுக்கி யெடுத்தேன். அப்பாஸ் தயாப்ஜியின் அருமைக் குமாரி இயற்றிய கீதம் அதுவாகும். சென்ற செப்டம்பர் மாதத்தில் உபவாச விரதம் தொடங்கிய போது அந்தக் கீதம் பாடப்பட்டது. இன்றைக்கு அந்த கீதத்தை எதிர்பாராத விதமாக நாங்கள் பாடியதும், சிறிது நேரத்துக்குள் காந்திஜி தாம் தீர்மானித்துள்ள கடுமையான உபவாச விரதத்தைப் பற்றி குறிப்பு எழுதித் தருவதும் எல்லாம் ஆண்டவன் ஆக்ஞையே யன்றோ!

* * *

மகாத்மாவின் விரதத்தைப் பற்றிக் கேள்வியுற்ற ஓர் நண்பர், "காந்தி யண்ணலே! கடவுள் கடவுளென்று அடிக்கடி சொல்கின்றீரே! இந்தக் கடவுள் சமாசாரம் எங்களுக்கு விளங்க மாட்டே னென்கிறதே" என்று ஆத்திரப்பட்டு ஒரு கடிதம் எழுதினர். அப்போது மகாத்மா, "அந்தக் கடவுளைப் பற்றியும் அவர் சக்தியைப் பற்றியும் விளக்குவதற்காகத்தான் இந்த உபவாஸ விரதம்" என்று பதில் சொல்லி விட்டார்.

* * *

தீண்டாமை யென்ற தீய வழக்கத்தின் கொடுமை நாட்டில் எவ்வளவு வலுத்திருக்கிறதென்பது இப்போதுதான் தெரிகிறது. அதற்கு எத்தனை ரூபம்! அது எவ்வளவு சேஷ்டைகள் செய்கிறது! தென்னாட்டில் நாட்டார் ஜாதியாருக்கும் ஹரிஜனங்களுக்கும் ஏற்பட்டுள்ள தகராறைப் பற்றிக் கேட்டிருப்பீர்கள்! ஹரிஜனங்களை நாட்டார்கள் நடத்தும் அநியாயங்களைக் கேள்விப்பட்டு காந்திஜி மனம் வெம்பிப் போயிற்று. "1924-ம் வருஷத்தில் ஹிந்து முஸ்லீம் பிணக்கை இது ஞாபகப் படுத்துகிறது" என்று மகாத்மா கூறினர். சரி! கிழவர் துயரங்களைச் சேகரிக்க ஆரம்பித்து விட்டாரென்று எங்களுக்குப் புலனாயிற்று. அதன் பயனாகவே இந்த உபவாஸ விரதம் தோன்றிற்று.

எழெட்டு நாட்களுக்கு முன்னே ஐரோப்பாவினின்று வந்த ஒரு கடிதத்தில் மகமத் நபிகள் நாயகம் உண்ணா விரத மேற்ற சரிதத்தைப் பற்றி குறிப்பிடப்பட் டிருந்தது. "உபவாஸமிருக்கும் போது அல்லாவின் அமுதம் எனக்குக் கிடைக்கிறது" என்று நபிகள் நாயகம் சொன்னாராம். இந்தக் கடிதத்தைப் படித்தவுடன் மகாத்மாவின் எண்ணங்களில் ஏதோ தைத்திருக்க வேண்டும்! அதன் பயன் தான் இந்த 21 நாள் உபவாஸம் போலும்!

* * *

"அன்னை ஜானகியை இராவணன் அன்று சிறை யெடுத்தான். அதற்கு மேல் அந்த அரக்கன் ஏதும் செய்யவில்லை. ஆனால் அவனைவிடக் கொடுமையாக இந்தத் தீண்டாமை யரக்கன் கொடுமை யிழைக்கின்றான். மதத்தின் பெயரினாலேயே அக்ரமங்கள் நடைபெறுகின்றன! நீகிரோ அடிமைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மதத்தை அடிப்படையாகக்கொண்டு வளர்ந்து வரும் அடிமைத் தனம் இந்த நாட்டில்தா னிருக்கிறது. இதைக் காணும்போது வெறுப்பு அதிகமா யிருக்கிறது. ஆனால் நான் எனது ஹிந்து மதத்தைப் புறக்கணிக்க முடியாது" என்று காந்திஜி புனிதமான இந்த வாரத்தில் ஓர் தடவை கூறினர். மதத்தை ஆதாரமாகக் கொண்டு சாஸ்திரிகளும் பண்டிதர்களும் எழுதும் கடிதங்களைக் காணும் போது பகவானிடம் முறையிட வேண்டுமென்று காந்திஜி கதறினர். அதன் பயனாகவே 21 நாள் உபவாஸ விரதம் ஏற்றார்.

* * *

"மாஜி நீதிபதிகளும், அறிவில் சிறந்த வக்கில்களும் ஹரிஜன இயக்கத்தை ராஜீய இயக்கமென்று சந்தேகப் படுகின்றார்களே, என் செய்வது? சாஸ்திரிமாரோடு மத பூர்வமாக எப்படித் தர்க்கிப்பது? அம்பேத்கர் போன்ற ஹரிஜனத் தலைவர்கட்கு எவ்வாறு நம்பிக்கை யூட்டுவது? மதத்தின் பேரால் நடக்கும் காலித்தனங்களை எவ்வாறு நிவர்த்திப்பது? இத்தனைக்கும் ஒரே சஞ்சீவி உண்டு. பண்டைக்கால ரிஷிகள் அனுஷ்டித்தது அந்த சஞ்சீவி. அதுதான் உபவாஸ விரதம். அன்று ராமபிரான் சமுத்திரக் கரையில் நின்று எவ்வாறு ராவணனைத் தாக்குவது என்று ஆலோசித்தார். உபவாஸம் கிடந்தார். இன்று ராவணனைவிடக் கொடுமை மிகுந்த ஓர் அரக்கன் இருக்கின்றான். அவனை ஒழிக்கும் இயக்கத்தில் உழைக்கும் தொண்டர்களின் குணதிசயங்களோ போதவில்லையே என் செய்வது? அவர்களுக்கு அறிவுறுத்துவதற்கும் இந்த உபவாஸம் அவசியமன்றோ!" என்பது காந்திஜியின் அருள் வாக்கு.

—"ஹரி ஜனம்"

ஐயனின் மகா யக்ஞம்

எவர் கெஞ்சியும் பயனில்லை. எவர் வேண்டுகோளும் ஐயன் செவியில் ஏறவில்லை. அவர் அருமைத் திருமகன் கண்ணீரும் கம்பலையுமாய் இரந்தும் ஐயன் திருவுள்ளம் ஒரு துளியும் அசையவில்லை. ஈசன் கட்டளைக்குமுன் இவையெல்லாம் எதிர் நிற்குமோ? ஐயனின் மகாயக்ஞம் சரியாக மேமீ 8உ பகல் பனிரண்டு மணிக்கு ஆரம்பித்து விட்டது. சிறைவாசலில் ஏராளமான மோட்டார் வண்டிகள் நின்றிருந்தன. அப்பொழுது சிறைக்குள்ளே, சரோஜினி தேவி, தேவதாஸ் காந்தி இருவரையும் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை. மகாத்மாஜியுடன் இருக்கும் சிறைத் தோழர்களான சர்தார் படேலும், தேசாயும் கூட விருந்தார்கள்.

மகாதேவ தேசாயும், தேவதாஸ் காந்தியும் ஐயனுக்கு மிகப் பிரியமான தெய்வ ஸ்தோத்திரங்களைப் படித்தார்கள். மகாத்மாஜீ ஆரஞ்சுப் பழ ரசம், தேன், சுத்த ஜலம் ஆகியவற்றில் சிறிது பருகினர். அதனுடன் 21 நாள் உபவாசமென்ற மகா யக்ஞம் ஆரம்பமாகி விட்டது.

உபவாசம் துவங்கிய அரை மணி நேரத்துக்குப் பின்னர், சிறைக்குள்ளே உருக்கமான காட்சிகள் நிகழ்ந்தன. பத்திரிகை நிருபர்களும் சில நண்பர்களும் உள்ளே விடப்பட்டார்கள். ஐயன் தமது வழக்கமான புன்முறுவலுடனே, மிக சந்தோஷமாக, தமது அறைக்கு வெளியே உட்கார்ந்திருந்தார். வந்தவர்களுடன் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்து, ஒருவர் ஒருவராகத் தம்மிடம் வந்தவரை யெல்லாம் பரிவுடன் முதுகைத் தடவிக் கொடுத்தார். ஒருவர் பாக்கியின்றி யாவரும் கண்ணீர் விட்டார்கள். பெண்மணிகளோ தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார்கள். காந்திஜி ஒவ்வொருவரிடமும் அன்பாய்ப் பேசி, "சந்தோஷமா யிருங்கள்" என்று கூறினர்.

ஐயன் சொன்ன சொல் தவருத சத்திய சந்தன். ஐயன திருவாக்கு பொய்யா மொழியாகும். வெற்றியும் மங்களமும் ஐயன் பக்கமே என்பதில் ஐயமுமுண்டோ? ஆண்டவன் தன்னை முற்றும் புகலடைந்த ஐயனுக்கு நீர்க்காபுளும் முன்னினும் பன் மடங்கு போராற்றலும் நல்கி, ஐயன் கையையே எதிர்பார்த்து நிற்கும் ஏழைகளான பக்தர்களின் வயிற்றில் பால் வார்ப்பானாக!

வேலைத் திட்டங்கள்

ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், மகாத்மாவின் உபவாச காலத்தில் செய்ய வேண்டிய வேலைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்:—

1. ஹரிஜனச் சேரிகளில் தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யலாம். பின்னால் செய்ய வேண்டுமானால், அதற்கு வேண்டிய நிதியும் சேர்க்கலாம்.

2. சேரிகளை சுத்தம் செய்ய வேண்டும். இதனால், ஹரிஜனங்களுக்கு சுத்த உணர்ச்சி ஏற்படும்.

3. சேரிகளில், சௌகரியமும் சுகாதாரமும் வாய்ந்த கக்கூஸ் வசதி ஏற்படுத்த வேண்டும்.

4. உபவாச கால முழுவதும், மனிதனுடைய எண்ணத்தை ஈசுவரத் தியானத்தில் செலுத்துவிக்கக் கூடிய பஜனை ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்த வேண்டும்.

5. ஹரிஜனக் குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்யவேண்டும். அவ்வவ்விடத்தில் இது சம்பந்தமாக இருக்கும் தடைகளை அதிகாரிகள் மூலம் நிவர்த்திக்க வேண்டும். பொதுப் பள்ளிக்கூடங்களில் அவர்களையும் சேர்க்க முயற்சிக்க வேண்டும். தகுந்த ஹரிஜனக் குழந்தைகளுக்குப் பண உதவி செய்யலாம். சேரிகளிலேயே, பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தலாம். வயது வந்தவர்களுக்கு இராப்பள்ளிக் கூடங்கள் திறக்கலாம். இதில் நடக்கும் வெற்றிகரமான முயற்சிகள், நிச்சயமாக காந்திஜீ விரும்பும் ஆன்ம உணவை அவருக்குத் தரும்.

6. பக்தி பரமான சங்கீதம், பிரார்த்தனைக் கூட்டம் முதலியவற்றால் ஹரிஜனங்கள் குடிக்கும் வழக்கத்தை ஒழிப்பதற்கு முயற்சிக்கலாம்.

7. ஹரிஜனக் குழந்தைகளைக் கூட்டி வேடிக்கை விளையாட்டுகளில் கழிக்கச் செய்யலாம். குழந்தைகளின் இந்த சந்தோஷம் செயற்கைத் தடைகளை எல்லாம் மறையச் செய்து இருதய ஒற்றுமையை உண்டாக்கத் தக்கது.

இவ்வாறு உபவாச காலத்தில் நடக்கும் வேலைகளை யெல்லாம், 'பூனா ஹரிஜன்' பத்திராதிபருக்கு, கூட்டல் குறைத்தல் இன்றி, உள்ளது உள்ளவாறு அவ்வப்போது அறிவிக்கலாம். இவ்வாறு செய்தால், உபவாச காலத்தில் நாளுக்கு நாள் ஹரிஜன சேவை எவ்வளவு முன்னேறி வருகிறது என்பதை மகாத்மா தெரிந்து கொள்ளுவார்.

நீலநாகினியின் மறு ஜன்மம்

மகாத்மாவின் அறிவுறுத்தல்

மிஸ் நீலா குக் என்ற யுவதி யூத மதத்தைச் சேர்ந்தவள். பதினேழாவது வயதில் கிரீஸ் தேசத்தில் அவளுக்கு விவாகம் நடந்தது. ஒரு குழந்தையும் பிறந்தது. அதற்குப் பிறகு ஐரோப்பாவில் அவள் தீய வாழ்க்கையில் ஈடுபட்டாள். திடீரென்று அவளுக்கு ஒரு வெளிச்சம் தோன்றவே இந்தியாவுக்கு ஓடி வந்தாள். மகாத்மாஜியைத் தனது குருநாதராக ஏற்றுக் கொண்டாள். ஹிந்துவாக மாறினாள். பெங்களூரில் கையில் வாருகோல் தாங்கி ஹரிஜனச் சேரிகளைப் பெருக்கினாள். ஆனால் அங்கும் அவளது துன்மார்க்க எண்ணங்கள் தலை தூக்கத் தொடங்கின. ஆகவே அவள் தனது தீய எண்ணங்களை யெல்லாம் ஒரு கடித மூலமாகக் கதறி அய்யன் காந்தியடிகளிடம் பாவ மன்னிப்புக் கேட்டாள். அவளது கடிதத்தின் சுருக்கம் பின்வருமாறு:—

"மகாத்மாவே!

மீண்டும் எனது வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ள விரும்புகின்றேன். இதுவரையில் நான் அயோக்கியத்தனமாக நடந்து வந்திருக்கிறேன். உலக விவகாரங்களிலெல்லாம் தீயவைகளையே செய்திருக்கிறேன். மாறுவேடம் பூண்டு நடித்திருக்கிறேன். ஏராளமாக பிறரிடம் கடன் வாங்கிச் செலவழித்து விட்டு இந்தியாவுக்கு ஓடி வந்து விட்டேன். எனது பழைய வாழ்க்கையை அடியோடு ஒழித்து மறு ஜன்மமாக வாழ விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சேவை செய்து பிராயச்சித்தம் செய்து கொள்வதென்று தீர்மானித்துளேன்."

இந்த ஸ்திரீக்கு சபர்மதி ஆசிரமத்தில் போய் தொண்டு செய்யுமாறு மகாத்மாஜி கட்டளையிட்டு விட்டு, 'ஹரிஜன்' பத்திரிகையில் அவளைப்பற்றி தமது அபிப்பிராயங்களையும் வெகு பகிரங்கமாக எழுதி விட்டார். அவர் எழுதி யிருப்பதன் சுருக்கமாவது:—

"நாகினி தேவியின் நடவடிக்கைகள் கேவலமாக இருப்பதாக எனக்கு பெங்களூர் நண்பர்கள் எழுதினார்கள். ஆகவே என்னை வந்து உடனே காணுமாறு அவளுக்கு எழுதினேன். அவளும் உடனே ஓடி வந்தாள். அவள் முகத்திற் கெதிரேயே அவளைப் பற்றிய தகவல்களையெல்லாம் கூறினேன். பேச்சு வளர வளர உண்மைகள் வெளிவரத் தொடங்கின. கற்பில்லாமலும், சத்தியமில்லாமலும், ஊதாரியாகவும் அவள் வாழ்ந்தாளென்பது தெரியவந்தது. துன்மார்க்கச் செய்கைகளில் அவளுக்கு வெறுப்பு தோன்றவில்லை போலும்! நாட்டில் நடந்துவரும் ஹரிஜன இயக்கத்தில் அவள் கலந்து கொண்டதால் இயக்கத்தைக்கெடுக்கிறாளென்பதை நான் சுட்டிக் காட்டினேன். அவளைச் சுற்றி வேலை செய்துவரும் தொண்டர்களின் வாழ்க்கையையும் அவள் கெடுக்கிறாளென்பதையும் குறிப்பிட்டேன். நான் சொன்ன பிறகு அவளுக்கு நல்ல புத்தி உதயமாயிற்று. மீண்டும் அவள் பெங்களூருக்குச் சென்றாள். மறுபடியும் அவள் 'சைத்தான்' வசப்பட்டாளென அறிந்தேன். ஆகவே யோக்கியமாக அவள் ஹரிஜன சேவை செய்ய வேண்டுமானால் ஸபர்மதி ஆசிரமமே உகந்த இடமென்று எனக்குத் தோன்றிற்று.

"அந்நிய நாட்டினின்று வந்துள்ள, மனக்கிளர்ச்சி மிகுந்துள்ள இந்த யுவதியை, ஏற்கனவே தீய செய்கைகளில் ஈடுபட்ட இந்தப் பெண்ணை வேறு எந்த இடத்திற்கு நான் அனுப்புவது? கொஞ்சம் தயக்கத்தோடுதான் அவளை சபர்மதிக்கும் அனுப்பி யிருக்கிறேன். அவளுடைய தீய வாழ்வு அடியோடு மறைந்துவிட்டதென்று சொல்ல முடியாது. ஆயினும் மனித வாழ்க்கையில் திடீரென்று சுழற்சிகள் ஏற்படுவதுண்டு. அதே மாதிரி நீலநாகினி இனி யோக்கியமாக நடந்து கொள்வாளெனவே நான் எதிர்பார்க்கிறேன். பகவான் அவளுக்கு இனியாவது நற்புத்தி தரமாட்டானா?

"நாகினிதேவியின் வசிகரத்தில் பாழாகிப் போன இளைஞர்களுக்கு ஒரு வார்த்தை. என்னிடம் எல்லாவற்றையும் நாகினிதேவி வெளியிட்டு விட்டாள். உலகத்தில் எல்லோருக்கும் இளம் வயதில் மனக் கிளர்ச்சி ஏற்படுவது சகஜமே. ஆதலால்தான் பிரும்மசரிய விரதத்தை அனைவரும், கட்டாயமாக அனுஷ்டிக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டி யிருக்கிறது. 25 வயது வரையில் எல்லோரும் வெகு ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்.

"உலகத்தில் எல்லாச் சேவைகளைக் காட்டிலும் இந்த ஹரிஜன சேவைதான் மிக்க கடினமானது. இந்த ஊழியத்தில் மிக மிக சுத்தமான தொண்டர்கள்தான் தேவை. எளிய வாழ்வை இன்பமாக ஏற்கும் தொண்டர்களே வேண்டும். இந்தச் சேவையில் இறங்கியுள்ள இளைஞர்களும், யுவதிகளும் நீலநாகினியின் வாழ்வினின்று ஓர் பாடம் கற்றுக் கொள்வார்களாக!"

போன மச்சான்கள் நிலே

(திப்பு எழுதியது)

"அடுத்த வாரத்தில் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி 'பிரைவேட்'டாக நடக்கும். இந்தியப் பிரதிநிதிகள் அன்று கூட்டத்திற்கு வரமாட்டார்கள்" என்று ராய்ட்டர் தந்தி கூறுகிறது. அதாவது பார்லிமெண்டு சபை அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் அந்தக் கூட்டத்தில் ஜோலியே யன்றி இந்தியாவினின்று வந்த பாத்ரோ, ஸப்ரூ, ஐயகர் முதலிய நெல்லிக்காய் மூட்டைகள் அந்தக் கூட்டத்திற்கு வரலாகா தென்பது அதற்கு அர்த்தம். அன்று உள்ளே கூட்டம் நடக்கும் போது இந்த இந்தியப் பிரமுகர்கள் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு சீட்டாடிக் கொண்டிருக்க வேண்டும் போலும்!

சென்னையினின்று போயிருக்கிற பிரமுகர்களில் ஒருவருக்கு சீட்டாட்டம் வெகு நன்ருய்த் தெரியுமாம். அவர் சீமையிலிலேயே இந்தியர்களுக்கு சீட்டாட்டம் கற்றுக் கொடுக்கலாம். பஞ்சாபிலிருந்து சென்றிருக்கும் ஒருவருக்கு 50 கஜம் துணியைத் தலைப்பாகை கட்டிக்கொள்ளும் விதம் நன்ருய்த் தெரியும். தென்னிந்தியாவினின்று யாத்திரை சென்றுள்ளவர்கள் அந்த வித்தையை சீமையிலே ஒழிந்த நேரத்தில் கற்றுக் கொள்ளலாம். தாடியைச் சிக்கடையாமல் வைத்துக் கொள்வது ஒரு வித்தையாகும். அதைத் தாடிவாலாக்களிட மிருந்து இதரர் கற்றுக்கொண்டு வரலாம். இந்த மாதிரி கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டிக்குப் போயிருக்கிற பிரமுகர்கள் ஒழிந்த வேளைகளில் எதையாவது கற்றுக் கொண்டு திரும்பி வந்நார்களானல் அவர்களுக்கும் லாப முண்டு; அந்தந்த மாகாணத்திலும் வித்தைகள் பரவுவதற்கு இடமுண்டு.

போயிருக்கிறவர்களில் அப்பளத்தில் பிரிய முடையவர் ஒருவரிருக்கிருராம். அவருக்கு இந்தியாவிலிருந்து அப்பளப் பார்ஸல் போகப் போகிறதாகக் கேள்வி. இவ்வளவு காசைச் செலவழித்து அப்பளத்தைப் பார்ஸலனுப்புவதை விட அங்குள்ள பேர்வழிகளே ஒழிந்த வேளைகளில் அப்பள மிட்டுக் கொள்ளட்டுமே என்று ஒருவர் கூறுகின்ருர். எனக்கும் அது தான் நல்லதென்று தோன்றுகிறது.

சீமையில் சாப்பாட்டு ராமன் பேச்சு ஒரு புறம் இருக்க அவர்களுக்கு இப்போது இந்தியாவினின்று ஒரு திடுக்கிடும் செய்தி கிடைத்து அவஸ்தைப் படுகின்ருர்களாம். இந்தியாவின் பெருங்கிழவர் 21 நாள் உபவாஸமிருக்கப் போகிருரென்ற செய்தி கேட்டு அவர்கள் திடுக்கிட்டுப் போனர்களாம். "சாப்பிடுபவன் சாப்பிட வேண்டியது தான்; பட்டினி கிடப்பவன் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அவனவன் தலையெழுத்து" என்று ஒருவர் அங்கு வேதாந்தம் பேசினராம். கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி கூடுகின்ற வாரத்தைப் பார்த்தா காந்திக் கிழவர் பட்டினியைத் தொடங்க வேண்டும்? மறுநாள் தந்தி இன்னும் திடுக்கிடச் செய்திருக்கும்!

"காந்தி விடுதலை யடைந்தார்"

சட்டமறுப்பு 6 வாரத்துக்கு நிறுத்தம்.

என்ற பத்திரிகைத் தலையங்கங்கள் சீமையில் அவர்கள் கண்களை உறுத்தாமலிருக்குமா? "காந்தி விடுதலை யடைந்தால் பரவாயில்லை. சட்ட மறுப்பை அவர் நிறுத்துவானேன்? சட்ட மறுப்புச் செய்யாத நல்ல பிள்ளைகள் நாங்கள் என்று சர்க்காரிடம் சொல்லிக் கொண்டு கப்பல் பிரயாணம் சம்பாதித்ததற்கு ஆபத்து வந்து விட்டதே! இனிமேல் நம்மை ஆங்கிலேயர் லக்ஷியம் செய்வார்களா?" என்று உறுமுகிருர்களாம். அதைவிட அதிக ஆத்திர மூட்டக்கூடியது எதுவென்ருல், காந்தி சர்க்காருக்கு விடுத்துள்ள அறிக்கையில், "நான் இங்கிலாந்தினின்று திரும்பியபோது எந்த நிலையில் விட்டேனே அங்கிருந்து கயிற்றைப் பிடிப்பேன்" என்று கூறி யிருக்கின்ருர். அட கஷ்டமே! அப்படியானல் இந்த 16 மாத காலமாகச் செய்த அத்தனை முயற்சிகளும் வீணுவதால்? வெள்ளைக் கடுதாசி குப்பைக்குப் போவதா? கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியைக் கலைத்து விடுவதா? அட அநியாயமே! ஒன்றரை வருடத்திற்கு முன் விட்ட இடத்தைப் பிடிக்க வேணுமென்று காந்தி சொல்வதன் பொருள் தானென்ன வென்று ஐயாப்ரு கோஷ்டி யோசித்துக் கொண்டிருக்கிறதாம். இனி இவர்களைச் சீமையில் எவரும் பொருட்படுத்த மாட்டார்கள். அது ஒரு கஷ்டம்! சிறையிலுள்ள காங்கிரஸ்காரர்கள் அனைவரும் விடுதலை யடைந்து விட்டார்களானல் சீமை சென்று வந்த மகான்களுக்கு இந்தியாவில் எந்தத் திக்கிலும் வரவேற்பு உபசாரங்கள் கிடைக்கவே கிடைக்காது. இப்படி தங்கள் நிலைமை தமோறிப் போயிருப்பதை உணர்ந்து சீமைக்குச் சென்ற மச்சான்கள் கஷ்டப்படாமலென்ன செய்வார்கள்?

ஹிட்லரின் அட்டகாசம்

இந்தியா மீது ஏன் விரோதம் ?

ஜெர்மன் தேசத்தில் தலைவரான ஹிட்லருக்கு அதிகாரம் வந்தாலும் வந்தது, பிரமாத அட்டகாசம் செய்கிறார். ஏதோ வெறி பிடித்தவர் போல நடக்கிறாரே யொழிய, தலைவனாய் லட்சணமாய் நடக்கக் காணோம். தேளுக்கு அதிகாரம் கொடுத்தால் நாழிக்கு நாழி கொட்டு மென்ற கதையாகவே இருக்கிறது.

யூதர்களை அவர் படுத்திய பாட்டை நினைத்தால் மனம் பதறுகிறது. எதிர்க் கட்சியினராயிருந்தவரை யெல்லாம் சிறையில் போடுவதும், சுட்டு விழ்த்துவதும் இவ்வாறு ஏக ஆவேசமாய் நடந்து கொண்டார். இப்பொழுது அவர் கட்சியைச் சேர்ந்த மாணவர்கள், ஒரு பெரிய புத்தகசாலையிலிருந்த புத்தகங்களை யெல்லாம் சூரையாடி எங்கேயோ கொண்டு போய், பகிரங்கமாகக் கொள்ளி வைத்து விட்டவர்களாம். புத்தகங்களைச் சொக்கப்பானை கொளுத்தி விட்ட பையன்கள் "ஜெர்மன் மங்கையரையும் பெண்களையும் நாங்கள் பாது காப்போம்" என்று கும்மாளம் போடுகிறார்களாம்.

அவை புரொபஸர் மாக்னஸ் என்பவர் புத்தகசாலையிலிருந்த ஆண்-பெண் உறவு சம்பந்தமான ஆராய்ச்சி மிக்க நூல்கள். உலக முழுவதுமுள்ள வைத்தியர்க ளெல்லாம் பிரசித்தமாய்ப் புகழ்ந்து வந்த புத்தக சாலை போச்சு! என்னே! அதிகாரமென்ற மதுவின் வெறி!

இவை போதா வென்று, இந்தியா மீது வேறு பாய்ந்திருக்கிறார் ஹிட்லர்! இந்தியரின் சுதந்திர இயக்கம் நல்லதில்லையாம்; விரும்பத் தக்கது மல்லவாம். இந்தியாவில் பிரிட்டிஷாருக்குள்ள அதிகாரம் போய்விட்டால், பெரிய ஆபத்து வந்து விடுமாம். இவை ஹிட்லரின் திருவாக்கு! இவரை எதிர்த்து ஜர்மனியிலுள்ள திரு. சம்பகராமன் என்ற இந்தியர் சில துண்டுப் பிரசுரங்களும் வெளி யிட்டாராம்.

ஹிட்லர் தின்கிற சோற்றில் இந்தியா என்ன மண்ணை வாரிப் போட்டது? சொல்லப் போனால், இந்தியாவிலிருந்து வெளி நாடுகளுக்குப் போகும் பணத்தில் ஹிட்லரின் ஜெர்மனியும் கொஞ்சம் கூறு போட்டுக் கொண்டேயிருக்கிறது. இவ்வாறிருக்க, இந்தியாவுக்கு விரோதமாக ஹிட்லர் ஏன் கிளம்ப வேண்டும்?

ஆண் கூட்டம் அதிகமாச்சு

"இங்கிலாந்து, பிரான்ஸ், ஹாலண்டு, ஜர்மனி, துருக்கி முதலிய நாடுகளில் ஆண் கூட்டத்தை விட பெண்கள் தொகை அதிகமாயிருக்கிறது. ஆனால் இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஆண் கூட்டத்தை விட பெண்கள் தொகை மிகக் குறைவாக இருந்து வருவதாக ஜன கணிதியினின்று தெரிகிறது. சென்னை, பீஹார், ஒரிஸ்ஸா முதலிய மாகாணங்களாவது கொஞ்சம் தேவலை; டெல்லியிலோ மிக மிகக் குறைந்த அளவு பெண்களே இருந்து வருகின்றனர். ஜன கணிதியை சமர்ப்பித்த அதிகாரிகள் இந்த மாதிரி பெண் பஞ்சம் ஏற்படுவதற்குக் காரணமென்ன வென்று அறிந்து கூறலாகாதா? தெரிந்தால் பொதுஜன ஊழியர்களுக்கு அது உபயோகமா யிருக்குமே" என்று டெல்லி பத்திரிகையான 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' கூறுகிறது. ஆண் கூட்டம் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக, விவாகத்தில் பெண்ணோடு செலுத்தும் வரதக்ஷிணைத் தொகை குறையாதா வென்று தென்னிந்தியாவில் சிலர் நினைப்பார்களன்றோ! இன்னும் ஆண்கள் ஜாஸ்தியாகி விட்டால் பெண்ணுக்கு கன்யா தக்ஷிணை வாங்கலாமே யென்று நினைக்கின்ற தாய் தந்தையர்களும் உண்டு. பெற்றுப் போட்ட பெண்ணும் பிள்ளையும் வியாபாரச் சரக்குகளாக இக்காலத்தில் மாறியிருப்பது விபரீதம் தான்! ஆண் கூட்டம் அதிகமாக ஆக பெண்களைப் பெறுவோர் பாடு 'குஷி' தான்.

கைதியானார்

காங்கிரஸ் கமிட்டிப் பொதுக் காரியதரிசியான ஸ்ரீயுத ஜெயராம் தாஸ் தௌலத்ராம் மகாத்மா காந்தியைப் பார்த்துவிட்டுச் செல்லும்போது பம்பாயில் கைது செய்யப்பட்டார்.

பெஷாவரைச் சேர்ந்த ஸ்ரீமான் முன்ஷிராம் என்பவருக்கு கிரிமினல் லா சட்டப்படி இரண்டு வருஷங் கடுங்காவல் தண்டனை.

கேரள காங்கிரஸ் 3-வது ஜதா தொண்டர்கள் பிரசாரத்துக்காக கிராமங்களுக்குச் செல்லுகையில் கைது செய்யப்பட்டனர்.

சிவப்பு மைல் கல்

பெஷாவரில் அபராதத் தொகையை வசூல் செய்வதற்காக உதவி கமிஷனர் கிராமங்களுக்குச் செல்லும்போது மைல் கற்களுக்கெல்லாம் சிவப்பு வர்ணம் பூசப்பட்டிருந்ததாம்.

பீடி பிடிக்கும் பிள்ளைகள்

ஏழு வயது எட்டு வயதுடைய சின்னஞ் சிறு பையன்கள் பீடியும், சிகரெட்டும் புகைப் பதைத் தெருக்களில் காண்கின்றோம். சென்னைத் தெருக்களில் 'எச்சில் பீடி' பொறுக்கிப் பிடிக்கும் சிறுவர் பலருண்டு. சிறுவர்கள் ஆங்காங்கு சில்லறைத் திருட்டில் சம்பந்தப் படுவதற்கு இந்த பீடி-சிகரெட் மோகமே யாகும்.

"இந்த பீடி நல்லதா? அந்த பீடி நல்லதா" வென்று சின்னஞ் சிறுவர்கள் தர்க்கம் நடத்துவதைக் காணும் போது இந்தத் தீய வழக்கம் எவ்வளவு பரவி விட்டதென்பது தெரிகின்றது. ஸினிமாக்களில் தரை டிக்கட்டில் குந்தியிருக்கும் அரை டிக்கட் பையன்கள் புகைக்கும் பீடிக்கும் கணக்கு வழக்கில்லை.

இந்த மாதிரி சிறுவர்களிடை அதி வேகமாகப் பரவி வரும் இந்தத் தீய வழக்கத்தைத் தடுப்பதற்காக சென்னைச் சட்ட சபையில் ஒரு மகமதிய அங்கத்தினர் ஒரு மசோதா கொண்டு வரப் போகின்றாராம். அநேக தேசங்களில் சிறுவர்களை இவ்விஷயத்தில் தடை செய்யும் சட்டங்கள் நிறைவேறி யிருக்கின்றன. ஆகவே சென்னைச் சட்ட சபை அங்கத்தினர்களுள் முக்காலே மூணு வீசம் பேர்வழிகளும் புகை பிடிக்கும் 'ஷோக்' உடையவர்களானலும் குழந்தைகளை இவ்விஷயத்தினின்று தடுப்பதில் ஒற்றுமையாய்த்தான் இருப்பார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது. அம் மசோதாவில் அடியிற் கண்ட பிரிவுகள் கவனிக்கத்தக்கவை.

"16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு புகையிலை சாமானை விற்கும் கடைக்காரனுக்கு 20 ரூபாய்க்கு மேல் அபராதம் விதிக்கப்படும். 16 வயதுக்குட்பட்ட பையன் யாராவது பொது ஸ்தலத்தில் புகை குடித்துக் கொண்டிருப்பதைக் கண்டால் எந்தப் பள்ளிக்கூட உபாத்தியாயரும், எந்த ஜில்லா போர்டு மெம்பரும், எந்த டாக்டரும் பையனிட மிருந்து பீடியைப் பிடுங்கி எறியலாம்."

இந்த மசோதா சட்ட சபைக்கு வருவதற்கு முன்னடியே கடைக்காரர்கள் தேச நலத்தையும் நமது சிறுவர்களின் க்ஷேமத்தையும் உத்தேசித்து, இத் தீய வழக்கத்தில் ஈடுபட சிறுவர்களுக்கு இடங் கொடுக்கா திருப்பதே நல்லது.

ஹரிஜன இயக்கம்

உபவாஸம் வேண்டாம்

'ஸ்ரீயுத ராஜபோஜரும், மற்றவர்களும் உண்ணாவிரத மிருக்கக் கூடாது. பேச்சிலும், காரியத்திலும் பரிசுத்தமா யிருக்கட்டும். அவர்களின் முறை வரும்போது உபவாச மிருக்கலாம்" என்று காந்திஜி சபர்மதி ஆசிரம மானேஜருக்கு தந்தி கொடுத்திருக்கிறார்.

தோட்டிகளுக்கு சட்டை

தோட்டிகளுக்கு சட்டைகள், கொடுக்க வேண்டு மென்றும், குளிப்பதற்காகவும் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் பம்பாய்க் கார்ப்பொரேஷன் தீர்மானித்திருக்கிறதாம்.

'சங்கு சகாய நிதி'

முன் வரவு	70	0	0
குப்புஸா சென்னை	10	0	0
ஒரு அநுதாபி	5	0	0
	85	0	0

சிறையில் ஹரிஜன தினம்

லக்ஷ்மணபுரி ஜில்லா சிறையிலுள்ள ராஜீயச் சிறையாளர்கள் ஹரிஜன தினத்தன்று தாங்களே ஆத்ம சுத்தியின் பொருட்டு கக்கூஸ்களைச் சுத்தம் செய்தார்களாம். வழக்கமாக சுத்தம் செய்பவர்களுக்கு அன்று ஓய்வு நாள் கொடுத்து விட்டார்கள்.

சுதந்திரச் சங்கு ஆபீஸில்

மகாத்மா உபவாஸம் தொடங்கிய அன்று 100 ஹரிஜனப் பிள்ளைகளுக்கு சங்கு காரியாலயத்தில் போஜனம் நடந்தது. காலையில் ஊர்வலமும் காந்திஜி உபவாஸம் ஆரம்பித்த சமயமாகிய மத்தியானம் 12 மணிக்கு தெய்வப் பிரார்த்தனையும் மாலையில் ஊர்வலங்களும் நடைபெற்றன.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.